மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சத்தியமங்கலம்

அசல் வழக்கு எண்.132/2021

2022-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 27-ஆம் நாள் வா.சா.1 சாட்சி என் முன் சாட்சியாக விசாரிக்கப்பட்டார், 1983-ம் ஆண்டு 54-வது சட்டப்பிரிவு 6(2) ஏற்பாட்டின் படி திருமதி.P.சர்மிளா., பி.பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, சத்தியமங்கலம் அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : சாந்தி | வயது | : 38 |
| த/பெ | : லேட்.காத்தவராயன் (எ) தன்னாசி | சாதி | : |
| கிராமம் | : | சமயம் | : |
| தாலூக்கா | : சத்தியமங்கலம் | தொழில் | : |

முதல் விசாரணை

வா.சா.1 ஆகிய நான் இந்த வழக்கில் வாதி ஆவேன். என் தரப்பு முதல் விசாரணை ஆணை உறுதி நிருபணமாகிய வாக்குமூலத்தை தாக்கல் செய்கிறேன். வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான்.

09.03.1981-ம் தேதிய எனது தகப்பனார் லேட்.காத்தவராயன் (எ) தன்னாசி லேட்.குப்புசாமி மற்றும் நஞ்சுண்டன் ஆகியோர்களின் பெயரில் உள்ள கிரையப் பத்திரம் சான்று நகல் **வா.சா.ஆ.1**. 07.08.2006-ம் தேதிய லேட்.குப்புசாமியும் 2-ம் பிரதிவாதியும் சேர்ந்து 3-ம் பிரதிவாதிக்கு செய்து கொடுத்த கிரையப் பத்திரம் இணையவழி சான்று நகல் **வா.சா.ஆ.2**. 15.03.2006-ம் தேதிய எனது தந்தையாரின் இறப்புச் சான்றிதழ் அசல் **வா.சா.ஆ.3**. 14.01.2020-ம் தேதிய வாரிசு சான்றிதழ் அசல் **வா.சா.ஆ.4.** 27.06.2012-ம் தேதிய எனது தாயாரின் இறப்புச் சான்று அசல் **வா.சா.ஆ.5**. 11.02.2014-ம் தேதிய எனது தாயாரின் வாரிசு சான்று அசல் **வா.சா.ஆ.6.** 29.06.1981-ம் தேதிய எனது தந்தையும் அவரது சகோதரர்கள் ஆகிய குப்புசாமி மற்றும் நஞ்சுண்டன் மூவரும் கியைரம் வாங்கிய கிரையப் பத்திரம் இணையவழி சான்று நகல் **வா.சா.ஆ.7**. 16.11.2021-ம் தேதிய கிராம நிர்வாக அலுவலர் சான்று (அயிட்டம்-2) அசல் **வா.சா.ஆ.8.** 09.03.1981-ம் தேதிய கிரையப் பத்திரத்தின் சொத்து மதிப்பீடு இணையவழி நகல் **வா.சா.ஆ.9.** 29.06.1981-ம் தேதிய கிரைய பத்திரத்தின் சொத்து மதிப்பீடு இணைய வழி நகல் **வா.சா.ஆ.10**. எனது 2-வது அயிட்ட தாவா சொத்தில் வாதி கம்பி வேலி

போடப்பட்டுள்ள புகைப்படம் அசல் (எண்ணிக்கை-2) **வா.சா.ஆ.11**. எனது 2-வது அயிட்ட சொத்தில் வாதி கம்பி வேலி போட்டு இருந்ததை 4,5 பிரதிவாதிகள் கம்பி வேலி கற்களை உடைத்தும் வேலி கம்பியை சேதம் செய்தும் மற்றும் அறிவிப்பு பேனரை எரித்த புகைப்படம் (எண்ணிக்கை-3) அசல் **வா.சா.ஆ.12.** வாதி 2-வது அயிட்ட சொத்து இடத்தில் பழமுதிர் நிலையம் வைத்து நடத்தும் புகைப்படம் அசல் (எண்ணிக்கை-2) **வா.சா.ஆ.13**. மேற்படி புகைப்படங்களுக்குரிய ரசீது மற்றும் சி.டி அசல் **வா.சா.ஆ.14**. 19.08.2021-ம் தேதிய நான் 4,5 பிரதிவாதிகள் மீது கொடுத்த புகாரின் மீது வழங்கப்பட்ட மனு ஏற்பு ரசீது எண்.121/2021 நகல் **வா.சா.ஆ.15**. 07.03.2022-ம் தேதிய நான் 4,5 பிரதிவாதிகள் மீது கொடுத்த புகார்மனுவின் கைவசநகல் மற்றும் அதனடிப்படையில் 08.03.2022-ல் கொடுக்கப்பட்ட மனு ஏற்பு ரசீது நகல் **வா.சா.ஆ.16**. 22.03.2022 மற்றும் 25.03.2022-ம் தேதியில் 4,5 பிரதிவாதிகள் மீது தமிழ்நாடு போலீஸ்க்கு ஆன்லைன் மூலம் அனுப்பிய புகார் நகல் **வா.சா.ஆ.17.** 10.04.2022-ம் தேதிய 4,5 பிரதிவாதிகள் மீதும் அவர்களின் கூட்டாளிகளின் மீதும் சத்தியமங்கலம் காவல் நிலையத்தில் கோடப்பட்ட FIR.No240/2022 நகல் **வா.சா.ஆ.18**. 04.4.2022, 24.03.2022 மற்றும் 10.05.2022-ம் தேதிகளில் தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின் மூலம் பெறப்பட்ட மனுக்களின் நகல்கள் **வா.சா.ஆ.19.** 10.12.2019-ம் தேதிய வாரிசு சான்று வேண்டி ஆன்லைன் மூலம் பதிவு செய்யப்பட்ட ஒப்புகைச் சீட்டு மற்றும் சுய உறுதிமொழி ரசீது (விண்ணப்பம் எண்.7201912201385) அசல் **வா.சா.ஆ.20**. நான் வேலி கம்பி கற்கள் போடும் போது எடுத்த புகைப்படம் அசல் **வா.சா.ஆ.21.** 4,5 பிரதிவாதிகள் மற்றும் அவர்களின் கூட்டாளிகளின் சேர்ந்து கம்பி வேலி கற்களை உடைத்தவர்களின் புகைப்படம் (எண்ணிக்கை-2) அசல் **வா.சா.ஆ.22**.

தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கணிங்க வழக்கானது குறுக்கு விசாரணைக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.

(Sd)சாந்தி

(Sd)Tmt.P.Sharmila, B.B.A., B.L.,
District Munsif,
Sathyamangalam.